DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.6/2023**

**2025-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.8 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 8 | தொழில் | - | சென்ரிங் வேலை |
| பெயர் | - | மொய்தின் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | சலீம் | சமயம் | - | |
| கிராமம் | - | டீகோட்டம்பட்டி | வயது | - | 38/2025 |
| சாதி | - | | | | |

**<u>02-04-2025</u>**

**( 2-ம் எதிரி ஆஜர்)(1-ம் எதிரி ஆஜரில்லை )**

(1-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சென்ரிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முத்துராஜ் என்பவரை தெரியும். ஆஜர் 2-ம் எதிரியை தெரியும் 1-ம் எதிரி அய்யப்பன் என்பவரை தெரியும். இறந்துபோன மணிகண்டனை தெரியும். கடந்த 29-11-2022-ம் தேதி வால்பாறை காவல் நிலையத்திற்கு கீழ் உள்ள லாட்ஜில் பின்புறத்தில் நானும் மணிகண்டனும் கம்பி கட்டிக்கொண்டிருந்தோம். மதியம் சுமார் 01- 1.15 மணியளவில் நாங்கள் சாப்பிடுவதற்காக கீழே இறங்கும் போது மணிகண்டன் கால் தவறி கீழே விழுந்துவிட்டார். அதில் மணிகண்டனுக்கு கழுத்திலும், முதுகிலும் பலத்த அடிபட்டது. பின்னர் மணிகண்டனை 108 ஆம்புலன்ஸ் மூலம் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துசென்றோம். பின்னர் மேல்சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். பின்னர் மணிகண்டனின் பெற்றோருக்கு தகவல் தெரிவித்து அவர்கள் வந்தவுடன் நாங்கள் சென்றுவிட்டோம். மேல்சிகிச்சைக்காக மணிகண்டனை கோயம்புத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். பின்னர் மணிகண்டன் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். எங்களை அய்யப்பன் என்பவர் வேலைக்கு அமர்த்தினார். இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போலீசார் விசாரணையில் 29-11-2022-ம் தேதி கீரிதரன், மணி, சக்திவேல் ஆகியோர்களை அய்யப்பன் வேலைக்கு அழைத்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. மணிகண்டனையும், என்னையும் அய்யப்பன் வேலைக்கு அழைத்துவந்ததாக போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை. போலீசார் என்னிடம் முகவரி மட்டும் தான் கேட்டார்கள். மணிகண்டனை மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் அவசரத்தில் நான் முகவரி மட்டும் சொல்லிவிட்டு சென்றுவிட்டேன். போலீஸ்சார் விசாரணையில் சாப்பிட கீழே இறங்கும் போது கால் தவறி மணிகண்டன் கீழே விழுந்ததாக சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். இன்று

நீதிமன்றத்திற்கு என்னை அழைத்து வந்தது யார் என்றால் மணிகண்டனின் அப்பா, அம்மா, அண்ணன் நான் நான்கு பேரும் சேர்ந்து வந்தோம். எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் திருமணம் ஆகிவிட்டது. எனக்கு திருமணம் தேதி ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு குழந்தை உள்ளதா என்றால் உள்ளது குழந்தை பிறந்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் 10 வருடங்கள் ஆகிறது. குழந்தை பிறந்த தேதி ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு திருமண நாள் குழந்தை பிறந்த தேதி ஞாபகம் இல்லை. சம்பவதேதி மட்டும் எனக்கு மணிகண்டனின் உறவினர் சொல்லிக்கொடுத்தால் ஞாபகம் உள்ளது என்றால் சரியல்ல. இறந்த மணிகண்டன் அந்த கட்டிடத்திற்கு வரும்போது காலை மணி 11.00 மணி இருக்குமா என்றால் எல்லோரும் ஒன்றாகத்தான் வந்தோம். 10.00 மணிக்கு வந்துவிட்டோம். ஆஜர் எதிரியின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் பெயர் தெரியாது. அவர் கட்டிட உரிமையாளர் ஆவார். நான் முதல் விசாரணையில் சொன்ன தேதி தான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக மணிகண்டனின் பெற்றோர் இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். சம்பவதினத்தன்று நான் வேலைக்கு வரவில்லை என்றாலும், அ.சா.1 கொடுத்த தவறான புகாருக்கு வலுவூட்டுவதற்காக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மணிகண்டன் சம்பவதினத்தன்று வேலைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.